உண்மைதான்....

# நான் ரொம்ப miss பண்ணிட்டேன்....

**அன்பு வாலிப தம்பி தங்கச்சி!!!** இந்த மாயை நிறைந்த உலகில், மாயைக்கு பின்னால் ஓடிக்கொண்டிருக்கிறாயா? உன்னைப் போலத் தான் நானும் 17 வருடம் மாயைக்குப் பின்னால் ஓடினேன். நொடிப்பொழுதில் மறையும் உலக சந்தோஷத்துக்கு ஏங்கினேன். கடவுள் இருக்கிறார் என்று நம்பினேன். ஆனாலும் என்னை உண்மையாய் நேசிக்க ஒரு உறவு வேண்டும் என்று அலைந்து திரிந்தேன்...... பின்பு தாமதமாக அறிந்தேன், உண்மையாய் அன்பு செலுத்தினால் இந்த உலகத்தில் கிடைக்கும் பரிசு "காயங்கள்" மட்டுமே என்று... தனிமையை உணர ஆரம்பித்தேன்...மனுஷரால் அசட்டை பண்ணப்பட்டேன், ஒதுக்கப்பட்டேன், தனிமையில் அழுதேன், வெளியரங்கமாய் சிரித்தேன்... ஒரு நாள் என் கண்ணீரைத் துடைக்க ஒரு கரம் வந்தது, என்னை நேசிக்க ஒரு இதயம் வந்தது, என்னை தூக்கி சுமக்க ஒரு தோள் வந்தது.... அந்த இதயம் மாயையான உலகில் சிக்கின என்னை அள்ளி அனைத்தது... அன்றோடு என் தேடல் முடிந்தது.... அன்று ஒன்றை நான் உணர்ந்தேன், இந்த மாயையான உலகில் நான் தேடிய உண்மை எங்கும் இல்லை என்று.... என் தனிமையைக் கண்டு அதை உணர்ந்து என்னைத் தேடி வந்தார் "**என் இயேசு**"... என் இயேசுவோடு மட்டும், நான் வாழும் இந்த வாழ்க்கையே இந்த பிரதியை எழுதுவதற்கு காரணம்....



என் கண்ணீரைக் கண்டு, துடைத்து என் தனிமையை இனிமையாய் மாற்றின என் இயேசு பாரபட்சமில்லாதவர்... அவர் உன்னோடும் வாழ வேண்டும் என்று ஆசைபடுகிறார். **உன்னோடுமட்டும்..., உன் பாவங்களோடு அல்ல...** உன் இதயத்தில் அவருக்கு இடம் கொடுப்பாயா?.. தம்பி, தங்கச்சி! நீ சொல்லலாம் இதைபோல் நான் பல பிரதிகளை படித்திருக்கிறேன், எத்தனை முறையோ என் இதயத்தை இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறேன். ஆனால், பரிசுத்தம் என்பது ?????... ஒன்று சொல்லுகிறேன்... ஒரு குழந்தை நடக்க ஆரம்பிக்கும் போது விழுந்து, விழுந்து எழும்பும், சில நேரங்களில் இரத்தக் காயங்கள் ஏற்படும்... அதற்காக அந்த தாய், தன் குழந்தையை பார்த்து, நீ இனி நடக்க மாட்டாய் என்று சொல்வதில்லை. மாறாக, விழுந்த குழந்தையை தூக்கி எடுத்து மறுபடியும் நடக்க கற்றுத்தருவாள்... ஒரு உலகத்தாயே அப்படி இருக்கும் போது, சிந்தித்து பார், உன்னை உன் தாயின் கருவிலே உருவாக்கின இயேசு எவ்வளவு அன்பானவர் என்று... இந்த மாயையான உலகத்தை நான் முழுமையாக வெறுத்து என் இயேசுவுக்காக மட்டும் வாழ ஆரம்பிப்பதற்கு 10 மாதங்கள் ஆயின... நான் விழும்போது என்னோடு அமர்ந்திருந்தார், நான் அழும் போது என்னோடு அழுதார், அவர் என்னை தூக்கும் போது, புதுப்பெலன் தந்து தூக்கினார்.... ஒரு நாளும் என்னைத் தள்ளவும்இல்லை, பாரமாக நினைக்கவும் இல்லை.

இந்த உலகம் என்னை தள்ளினது, அவரோ என்னை அள்ளினார்....
இந்த உலகம் என்னை பகைத்தது, அவரோ என்னை அணைத்தார்...
இந்த உலகம் என்னை அநாதை என்றது, அவரோ என்னை சொந்த பிள்ளை என்று முத்தமிட்டார்...

உன்னை செதுக்குவதற்கு நீ இயேசுவுக்கு இடம் கொடுக்கும் போது தான், அவரால் உன்னை செதுக்க முடியும்... ஒரு சிலையை எப்படி நன்கு செதுக்கியதற்கு பின் தான் மக்கள் பார்வைக்கு வைப்பார்களோ, அதே போல்தான், நீ இயேசுவால் செதுக்கப்பட்ட பிறகு தான் உன்னால் இந்த மாயையான உலகில் பரிசுத்தமாய் வாழ முடியும்....

**அன்பு வாலிப தம்பி. தங்கச்சி! நீ விழுந்தது போதும். இன்று இயேசு உன்னை எழுப்பியது மீண்டும் நீ விழுவதற்கு அல்ல! முழு மனதுடன் தீர்மானம் செய்வாயா!**

**"இனி நானும் என் இயேசுவும் மட்டும்" என்று....**



For Contact
END TIME WARRIORS
Email : info@endtimewarriors.org